எவ்வளவு செலவாகும் என்பதையும் மீண்டும் ஆய்வு செய்ய இருக்கிறது. அதோடு மட்டுமல்லாமல் மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்ட முகமை அல்லாமல் இன்றைக்கு பொதுப்பணித்துறையின் மூலமாக ரூரல் ரோட்ஸ் செக்ஷனுக்கும் இந்தப் பணி பற்றிய கருத்துரு ஆய்வுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது. இதையெல்லாம் பெற்ற பிறகுதான் இதிலே முழுமையாக எவ்வளவு மதிப்பீடு என்பதை நிர்ணயம் செய்து பணி துவக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *298*, திரு. கே. கந்தசாமி, இருக்கையில் இல்லை.

வினா எண் 299, திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

299—

சித்தன்னவாசலை சுற்றுலா மையமாக்குதல்

30166*—திரு. சி. குழந்தைவேலு:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) குளத்தூர் தொகுதி, சித்தன்னவாசலைச் சுற்றுலா மையமாக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சித்தன்னவாசல் மாவட்ட உலாத்தலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) மாவட்ட உலாத்தலத் திட்டத்தின் கீழ் சித்தன்னவாசலில் ரூ. 8 இலட்சம் செலவில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

திரு. சி. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, அன்றைய வரலாறு, மதுரையில் பாண்டிய மன்னனை நீதி கேட்டு வெற்றி கண்டவர் கண்ணகி. இன்றைய வரலாறாம் தமிழகத்தின் நீதிதேவதை, என்றைக்கும் தமிழகத்தின் நிரந்தர முதல்வர், நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சியில் அமைச்சர் அவர்கள்

1995 ஏப்ரல் 10]

சுற்றுலாத்தலம் அமைத்துக் கொடுத்ததற்கு நன்றி கூறி மேலும் அந்த சுற்றுலாத்தலத்தை அழகுபடுத்தும் எண்ணம் ஏதும் அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நமது அன்னை டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் சித்தன்னவாசலில் ரூ. 8 இலட்சம் செலவில் பூங்கா, சிறுபாலம், உணவு விடுதி மற்றும் ஓய்வு அறைகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சித்தன்னவாசல் ஓவியங்கள், அஜந்தா, எல்லோரா ஓவியங்களுக்கு இணையான சிறப்புமிக்க ஓவியங்கள் ஆகும். இந்தியாவின் பல பகுதிகளில் இருந்தும் வெளிநாட்டில் இருந்தும் சுற்றுலாத்தலத்தை பார்வையிடுவதற்காக, ஓவியங்களைப் பார்வையிடுவதற்காக வருகிறார்கள். வரலாற்று புகழ்மிக்க அந்த ஓவியங்கள் நல்ல முறையில் தொல்பொருள் பாதுகாப்புத் துறையினால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அமைச்சர் அவர்கள் மீண்டும் அந்தப் பகுதியில் ஒரு நீர்வீழ்ச்சி இயக்கியை இயக்கித்தர ஆவன செய்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். நாகூர் மீரான்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட உலாத்தலத்திற்குரிய அனைத்து அடிப்படை வசதிகளையும் சுற்றுலாத் துறை செய்து கொடுத்து இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 300. டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

300—

கதர்த்துறையின் கூட்டுறவுச் சங்கங்கள்

35518*—டாக்டர் ,எஸ். சுந்தரராஜ்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் கதர்த் துறை மூலம் நடத்தப்படும் பருத்தி, பட்டு கூட்டுறவுச் சங்கங்கள் எத்தனை?